**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.06/2024**

**IN**

**அசல் வழக்கு எண்.237/2014**

1. பரமு அம்மாள் (இறந்தவர்)
2. சுவாமிநாதன்
3. கோமதிநாயகம் பாண்டியன்
4. முத்துக்குமார்
5. ராமையா (இறந்தவர்)
6. சென்பகராஜன் ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. கோட்டைச்சாமி
2. முத்துக்குமார்
3. கிருஷ்ணசாமி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(**இ.ம.எண்.09/2025 நாள் 23.07.2025 உத்தரவின்படி காலம்சென்ற 1, 5 மனுதாரர்களின் வாரிசான 6 வது கூடுதல் மனுதாரர் இம்மனுவில் கட்சி சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.14/2025 நாள் 04.08.2025 உத்தரவின்படி இம்மனு திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

இம்மனுவானது 23.08.2025 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:16 +0530

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ், வாதிகள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கை 1ம் வாதிக்கு, 5ம் தபசில் சொத்தை பொறுத்தும், 2ம் வாதிக்கு 2வது தபசில் சொத்தை பொறுத்தும், 3ம் வாதிக்கு 3வது தபசில் சொத்தை பொறுத்தும், 4ம் வாதிக்கு 4வது தபசில் சொத்தை பொறுத்தும், 5ம் வாதிக்கு 6வது தபசில் சொத்தை பொறுத்தும், 1ம் வாதிக்கு 7வது தபசில் சொத்தை பொறுத்தும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும், 1ம் பிரதிவாதி பெற்ற 11.12.2008 தேதி மற்றும் 29.05.2009 தேதி மேலநீலிதநல்லூர் சார்பதிவக ஆவணங்களும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பெற்ற 27.11.2008 தேதிய மேலநீலிதநல்லூர் ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல எனவும் மற்றும் செலவு தொகைகள் கோரியும் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கு பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், வாதிகள், பிரதிவாதிகளின் சொத்தை பொறுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச்சான்று நகல் எடுத்து பார்த்த பின்பு தான், பிரதிவாதிகள் சொத்தின் உரிமை குறித்த உண்மைநிலை, வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், மேற்படி பதிவு கிரைய ஆவணங்களிலேயே, வாதிகளின் முன் பாத்தியஸ்தரான குற்றாலபாண்டியன் இடத்திற்கு கிழக்கு என்று தெளிவாக மால் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தங்களின் பாத்தியதை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறார்கள் என்றும், மேற்படி சங்கதிகள் அனைத்தையும் பொருத்து, மேற்கூறிய பதிவு கிரைய ஆவணங்களும், உயில் ஆவணங்களும், நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தால் மட்டுமே இவ்வழக்கின் பிரச்சனைகளுக்கு இந்நீதிமன்றம் ஒரு நல்ல தீர்முடிவாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:24 +0530

எடுக்க முடியும் என்பதாலும், வாதிகள் நீதியின் பலனை அடைந்து கொள்ள வேண்டியும், மேற்படி பிரதிவாதிகளின் முன் ஆவணங்களை பொறுத்து நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தெரிவித்து கொள்ள வேண்டியும், மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ரிசிவ் செய்துகொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக் கூடியதாக இருக்கிறது என்றும், இந்த பதில் எதிர்வழக்குரை பிரதிவாதிகளின் உரிமையைப் பொறுத்து உண்மைநிலையை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துவதற்கு மட்டுமே தாக்கல் செய்யப்படுகிறது என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதால், எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், ஆகையால் வாதிகள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் Receive செய்து கொள்ள உத்தரவிடக் கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :–

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், வாதிகள் தரப்பில் விசாரணை முடிந்த பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்ததில் கடந்த 09.02.2023ல் 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த 09.02.2023 பின்பாக பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக 18.02.2023ல் வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், அதன் பின்னிட்டு வாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக சுமார் 25 வாய்தாக்கள் வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், பி.வா.சா.1–ஐ முதல் விசாரணை செய்த

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:32 +0530

பின்பாக சுமார் 1 1/2 ஆண்டு காலம் வாதிகள் தரப்பில் வாய்தாக்கள் பெறப்பட்டு, பின்னர் கடந்த 19.09.2024ல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வழக்கை தாக்கல் செய்த வாதிகள் தான் மேற்படியார்களின் வழக்கை போதிய சான்றாவணங்களின் மூலம் தெளிவான முறையில் இந்நீதிமன்றத்தில் நிரூபித்தால் மட்டுமே மேற்படியார்கள் தீர்ப்பாணையை பெற இயலும் என்பது நிலையான சட்டக்கோட்பாடாகும் என்றும், ஆனால் வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் பிரதிவாதிகளின் வழக்கை முந்தைய ஆவணங்களை மறைத்து வழக்கு நடத்தி வருவதாகவும், எனவே மேற்படியார்கள் முந்தைய ஆவணங்களை குறிப்பிட்டு பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதி கேட்பது, சட்டத்திற்கு முரணானதாகும் என்றும், மனுதாரர்கள் தரப்பில் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டுமென்றால் கட்டாய வழக்கு விசாரணைக்கு முன்பாகவே தாக்கல் செய்திடவேண்டும் என்றும், ஆனால் இவ்வழக்கில் வாதிகள், வாதிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 09.02.2023ல் முதல்நிலை சாட்சியம் அளித்த பின்பாக குறுக்கு விசாரணைக்காகச பல வாய்தாக்கள் பெறப்பட்டு அதன் பின்னீட்டு 1 1/2 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலங்கள் கழித்து இம்மனுவையும் இந்த அபிடவிட்டையும் தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்விதமான சட்டப்படியான உரிமையும் கிடையாது என்றும், சட்ட அனுமதியும் கிடையாது என்றும், இறந்துபோன 1ம் மனுதாரருக்காகவும் சேர்த்து இம்மனுதாரர்கள் இந்த அபிடவிட்டையும், மனுவையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் தரப்பு சாட்சியை இந்த பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக அனேகமான சாட்சியம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியத்தை அழிக்கும் முகமாக மனுதாரர்கள் பொய்யான காரணங்களைக்கூறியும் இவ்வழக்கை மேல்நடத்தாமல் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர்கள் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதார்கள் தாக்கல்செய்துள்ள இந்த வம்பு மனுவும் சட்டப்படி நிலைக்கத்தக்கதில்லை என்றும், வாதிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலமையிலும், குறுக்கு விசாரணைக்காக சுமார் 20 மாதங்கள் வாய்தா பெறப்பட்டு அதன்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:39 +0530

பின்னிட்டு இம்மனுவையும், இந்த அபிடவிட்டையும் தாக்கல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு எவ்விதமான சட்டப்படியான உரிமையும் கிடையாது என்றும், அனுமதியும் கிடையாது என்றும், மேலும், 1ம் மனுதாரர் என கூறப்படும் பரமு அம்மாள் என்பவர் கடந்த 11.04.2024 தேதியில், மனுதாரர்களையும் மற்றும் இன்னொரு மகனான அசோக் குமார் என்பவரையும் விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி பரமு அம்மாளின் இறப்பினை வாதிகள் தரப்பில் தெரியப்படுத்தி பதிவு செய்யாமலும், இறந்துபோன 1ம் மனுதாரரின் பெயரிலும், மனுதாரர்கள் பொய்யான இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது வாதிகள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும், 1ம் பிரதிவாதி பெற்ற 11.12.2008 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவக பதிவுக்கிரைய ஆவண எண்.1770/2008 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கும்படிக்கும், 1ம் பிரதிவாதி பெற்ற 11.12.2008 தேதிய ஆவண எண்.1770/2008 ஐ சீர்திருத்தம் செய்து 29.05.2009 தேதியில் பதிவு செய்துள்ள சீர்திருத்த கிரைய ஆவண எண்.1086/2009 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கும்படிக்கும், 2, 3 பிரதிவாதிகள் பெற்ற 27.11.2008 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவக பதிவுக்கிரைய ஆவண எண்.1695/2008

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:47 +0530

ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கும்படியும் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மேலும், இம்மனுவானது அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து, தற்பொழுது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் வாதிகள், பிரதிவாதிகளின் சொத்தை பொறுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச்சான்று நகல் எடுத்து பார்த்த பின்பு தான், பிரதிவாதிகள் சொத்தின் உரிமை குறித்த உண்மைநிலை, வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், மேற்படி பதிவு கிரைய ஆவணங்களிலேயே, வாதிகளின் முன் பாத்தியஸ்தரான குற்றாலபாண்டியன் இடத்திற்கு கிழக்கு என்று தெளிவாக மால் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தங்களின் பாத்தியதை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறார்கள் என்றும், மேற்படி சங்கதிகள் அனைத்தையும் பொருத்து, மேற்கூறிய பதிவு கிரைய ஆவணங்களும், உயில் ஆவணங்களும், நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தால் மட்டுமே இவ்வழக்கின் பிரச்சனைகளுக்கு இந்நீதிமன்றம் ஒரு நல்ல தீர்முடிவாக எடுக்க முடியும் என்பதாலும், வாதிகள் நீதியின் பலனை அடைந்து கொள்ள வேண்டியும், மேற்படி பிரதிவாதிகளின் முன் ஆவணங்களை பொறுத்து நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தெரிவித்து கொள்ள வேண்டியும், மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ரிசிவ் செய்துகொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிகள் தரப்பில் விசாரணை முடிந்த பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ஐ முதல் விசாரணை செய்த பின்பாக சுமார் 1 1/2 ஆண்டு காலம் வாதிகள் தரப்பில் வாய்தாக்கள் பெறப்பட்டு, பின்னர் கடந்த 19.09.2024 ல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும், வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:07:56 +0530

பிரதிவாதிகளின் வழக்கை முந்தைய ஆவணங்களை மறைத்து வழக்கு நடத்தி வருவதாகவும், எனவே மேற்படியார்கள் முந்தைய ஆவணங்களை குறிப்பிட்டு பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதி கேட்பது, சட்டத்திற்கு முரணானதாகும் என்றும், மனுதாரர்கள் தரப்பில் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டுமென்றால் கட்டாய வழக்கு விசாரணைக்கு முன்பாகவே தாக்கல் செய்திடவேண்டும் என்றும், ஆனால் இவ்வழக்கில் வாதிகள், வாதிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 09.02.2023 ல் முதல்நிலை சாட்சியம் அளித்த பின்பாக குறுக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் பெறப்பட்டு அதன் பின்னீட்டு 1 1/2 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலங்கள் கழித்து இம்மனு தாக்கல் செய்ய சட்ட அனுமதி கிடையாது என்றும், இறந்துபோன 1ம் மனுதாரருக்காகவும் சேர்த்து இம்மனுதாரர்கள் இந்த அபிடவிட்டையும், மனுவையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் தரப்பு சாட்சியை இந்த பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக அனேகமான சாட்சியம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியத்தை அழிக்கும் முகமாக மனுதாரர்கள் பொய்யான காரணங்களைக்கூறியும் இவ்வழக்கை மேல்நடத்தாமல் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர்கள் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதார்கள் தாக்கல்செய்துள்ள இந்த வம்பு மனுவும் சட்டப்படி நிலைக்கத்தக்கதில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்து பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்கள்/வாதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

11) மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர்கள் தரப்பு பதில் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:08:03 +0530

12) இருப்பினும், இம்மனுவில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதுபோல இம்மனுவானது வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்து, தற்பொழுது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு பதில் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**14) இறுதியாக**

இம்மனுவானது ரூ.1500/− (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 18.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:08:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

**– இல்லை –**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.12 18:08:23 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.06/2024
in
O.S.No.237/2014
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 12.09.2025**